ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி 13 பேர் எடுத்துக் கொள்ள படவேண்டும் என்று இருந்தாலும் ஒரு நபர் ஜாஸ்தியாக எடுத்து ஆக 14 பேர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

எழும்பூரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனை.

*வினா எண் 1038— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எழும்பூரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையில் ஏற்படும் நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு மேற்படி மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையை விரிவுபடுத்தி, தற்போதுள்ள 250 படுக்கை வசதிகளை 450 ஆக உயர்த்த ஒரு வரைவுத் திட்டம் மருத்துவக் கல்லூரி இயக்குநரால் பொதுப்பணி தலைமைப்பொறியாளருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே உள்ள அத்தனை மக்களும் இந்த எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனைக்குத்தான் குழந்தைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே ஆங்காங்கே உள்ள மருத்துவமனைகளிலே குழந்தைகளுக்கு வைத்தியம் பார்க்கின்ற அளவிலே ஏற்பாடு செய்து ஒட்டுமொத்தமாக எல்லோருமே எழும்பூருக்கு வருவதைக் தடுத்து நிறுத்த அரசு ஏற்பாடு செய்யுமா? மேலும் பக்கத்திலே உள்ள காலியிடங்களையும் விலைக்கு வாங்கி மருத்துவமனையை விரிவுபடுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மூலக்கேள்வி எழும்பூரிலே இருக்கக்கூடிய குழந்தைகள் நல மருத்துவமனை விரிவுபடுத்தப்படுமா என்பது. அந்தக் கேள்விக்கு நான் பதிலளித்திருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் இடங்களிலே அப்படிச் செய்யப்படுமா என்று கேட்கிறார்கள். ஸ்டான்லி மருத்துமனையிலே 240 படுக்கைகள் கொண்ட பெரிய அளவிலே ஒரு குழந்தைகளுக்கான பிரிவை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை இந்த ஆண்டு தீட்டி இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, எழும்பூர் மருத்துவமனையிலே போதிய நவீனக் கருவிகள் இல்லாததன் காரணத்தால் குழந்தைகளுக்கு வைத்தியம் பார்ப்பதிலே சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே நவீன கருவிகளை வாங்கி, கூடுதலாக டாக்டர்களை நியமிப்பதற்கும் அரசு ஆவண செய்யுமா? மேலும் இந்த மருத்துவமனை தென் சென்னையிலே தான் இருக்கின்றது. வட சென்னையிலேயும் குழந்தைகள் நல மருத்துவமனையை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

1981 மே 14]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, வட சென்னையிலே இருக்கின்ற ஸ்டான்லி மருத்துவமனையிலே குழந்தைகளுக்கான ஒரு பிரிவு ஏற்படுத்துவதற்கு திட்டமிடப் பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். ஆனால் இப்போது எழும்பூர் மருத்துவமனையிலே நவீனக் கருவிகள் இல்லை என்ற புதிதான தகவலைத் தருகிறார்கள், குழந்தைகளுக்குத் தேவையான அத்தனை நவீனக் கருவிகளும் அதாவது என்னென்ன கருவிகள் வேண்டுமோ அவை அத்தனையும் அங்கே இருக்கின்றன. தென் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக நடந்து வரும் மருத்துவமனை அது என்று அத்தனை பேரும் பாராட்டக் கூடியதாக இந்த மருத்துவமனை இருக்கின்றது. டாக்டர் களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை கவனிக்கிறோம்.

அவினாசியில் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 1039 திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் அவினாசியில் அரசு மருத்துவ மனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகையில் எத்தனை படுக்கை வசதிகளைக் கொண்டதாக இருக்கும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கோவை மாவட்டம் அவினாசியில் ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவ மனையாக மாற்றும் வேண்டுகோள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்துள்ளது.

(ஆ) மாவட்ட மருத்துவ அலுவலர் உரிய விதிமுறைகளின்படி செயற்குறிப்பு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளார்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அவிநாசித் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக மட்டுமல்லாமல் கிட்டத்தட்ட 3 இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு தொகுதியாகவும் இருந்து வருகின்றது. அங்கே பிரைமரி ஹெல்த் சென்டரைத் தவிர வேறு மருத்துவமனை இல்லை. ஆனால் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து செயற்குறிப்பு வந்திருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு மதிப்பீட்டிலே அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அந்த மருத்துவமனையைக் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு அவகாசம் எடுத்துக் கொள்ளப்படும்.